# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆவணி - 21 திங்கள் 06.09.2021 மலர் - 2, இதழ் - 153


விஜயபாரதம்

## வீரர்களுக்கு வாழ்த்துகள்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக்கில் 56 வீரர்களைக் கொண்ட பாரத அணி பங்கேற்றது. பல்வேறு போட்டிகளில் திறமையை வெளிக்காட்டி பாரதத்தின் விளையாட்டு வீரர்கள் தாங்களும் மற்றவர்களுக்கு சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபித்தனர். போட்டிகளில் நமது வீரர்கள், 5 தங்கம், 8 வெள்ளி, 6 வெண்கலம் என்று ஒட்டுமொத்தமாக 19 பதக்கங்களை வென்றுள்ளனர். பாராலிம்பிக்கில் முதல் முறையாக, இரட்டை இலக்கத்தை பதக்கப்பட்டியலில் பாரத அணி இடம்பெற்றுள்ளது. இதற்கு நமது வீரர்களின் அயராத உழைப்பு, விடாமுயற்சி மட்டுமல்ல அதனுடன் இணைந்து, நமது மத்திய அரசு அவர்களுக்கு அளித்த ஊக்கம், உற்சாகம், உலகத்தர பயிற்சி, உபகரணங்கள், உற்சாகப்படுத்தி ஊக்கமூட்டிய பிரதமர் என அனைத்துமே இந்த வெற்றிக்கு காரணம் என்றால் அது மிகை அல்ல. இதில் கலந்துகொண்ட அனைத்து வீரர்களுக்கும் வாழ்த்துகள்.

## தங்கம் வென்ற சிங்கங்கள்



அவனி லேகரா மகளிர் பத்து மீட்டர் ஏர் ரைஃபிள் ஸ்டேண்டிங் ஆர் 2





சுமித் ஆண்டில் ஆண்கள் ஈட்டி எறிதல் எஃப் 64



மணீஷ் நார்வால் ஐம்பது மீட்டர் ஏர் பிஸ்டல் எஸ். ஹெச் 1



பிரமோத் பகத் பேட்மிண்டன் ஆண்கள் ஒற்றையர் எஸ்.எல்.3 பிரிவு



கிருஷ்ணா நகர் பேட்மிண்டன் ஆண்கள் ஒற்றையர் எஸ்.எச் 6

# வெள்ளி வென்ற வேந்தர்கள்



பாவினா படேல்
பெண்கள் ஒற்றையர்
டேபிள் டென்னிஸ் சி 4



நிஷாத் குமார் ஆண்கள்
உயரம் தாண்டுதல் டி 47



தேவேந்திர ஜகாரியா
ஆண்கள் ஈட்டி எறிதல்
எஃப் 46




யோகேஷ் கதுனியா
ஆண்கள் வட்டு எறிதல்
எஃப் 56



மாரியப்பன் தங்கவேலு
ஆண்களுக்கான உயரம்
தாண்டுதல் டி 42



பிரவின் குமார் ஆண்கள்
உயரம் தாண்டுதல் டி 64



சிங்கராஜ் அதானா ஐம்பது
மீட்டர் கலப்பு ஏர் பிஸ்டல்
எஸ்.ஹெச் 1



சுஹாஸ் லலினகெரே எதிராஜ்
ஆண்கள் ஒற்றையர் மற்றும்
எஸ்.எல் 4

# வெண்கலம் வென்ற வீரர்கள்



சிங்கராஜ் அதானா
ஆண்கள் பத்து மீட்டர்
ஏர்பிஸ்டல் சூட்டிங்



சுந்தர் சிங் குர்ஜார்
ஆண்கள் ஈட்டி எறிதல்
எஃப் 46



சரத்குமார் ஆண்கள்
உயரம் தாண்டுதல்
போட்டியில் டி 42



அவனி லேகரா பெண்கள்
ஐம்பது மீட்டர் ரைஃபிள்
எஸ்.ஹெஸ் 1



ஹர்விந்தர் சிங்
ஆண்களுக்கான
வில்வித்தை தனிநபர்
ரிசர்வ் ஓபன் பிரிவு



மனோஷ் சர்கார்
பேட்மிண்டன் ஆண்கள்
ஒற்றையர் எஸ்.எல் 3


# துறவிகள் விஜயம்

கொரோனா தாக்குதலில் மனம் சோர்வடைந்துள்ள மக்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்தவும் அரசின் வழிகாட்டு நடைமுறைகளை கடைபிடிக்கவும் வலியுறுத்தியும் துறவிகள் மக்களின் வீடுகளுக்கு நேரில் சென்று ஆசிகள் வழங்குகின்றனர். விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பின் வடதமிழகம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த துறவிகள் யாத்திரை நிகழ்ச்சி தற்போது திருப்பத்தூர், சேலம், கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், மத்திய சென்னை, விழுப்புரம் என பல்வேறு மாவட்டங்களில் துவங்கியுள்ளது. வடதமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இந்த யாத்திரை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# உலக பிரபலத் தலைவர் மோடி



விஜயபாரதம்

உலக தலைவர்களில் மிகவும் பிரபலமானவரை கண்டறிய 'தி மார்னிங் கன்சல்ட்' என்ற அமெரிக்காவின் புலனாய்வு நிறுவனம் ஆய்வு நடத்தியது. இதற்கென உலகளவில் மக்களால் நன்கு அறியப்பட்ட ஆஸ்திரேலியா, பிரேசில், கனடா, பிரான்ஸ், பாரதம் உள்ளிட்ட 13 நாடுகளின் தலைவர்கள் குறித்து கணக்கெடுப்புகளை நடத்தியது. இதில் 70 சதவீதம் மக்களால் விரும்பப்பட்ட பிரபலமாக பாரதப் பிரதமர் நரேந்திர மோடி முதல் இடத்தை பிடித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் உள்ளிட்டவர்களை விட மிகவும் பிரபலமாக உள்ளார் மோடி. 2ம் இடத்தில் மெக்ஸிக்கோ அதிபர் ஆன்ட்ரீவ்ஸ் மானுவேலி லோபெஸும், 3ம் இடத்தில் இத்தாலி பிரதமர் மரியோ திராகியும் உள்ளனர். ஜோ பைடன் 5ம் இடத்திலும், கனடாவின் ஜஸ்டின் ட்ரூடோ 7ம் இடத்திலும் உள்ளனர்.

# "ஒய்" பிரேக்




விஜயபாரதம்

ஊழியர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையில் கடந்த 2019ல், 'ஒய் பிரேக்' எனப்படும் யோகா பயிற்சி செய்ய ஐந்து நிமிட யோகா இடைவேளை வழங்கும் திட்டம் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. முதற்கட்டமாக இத்திட்டம் கடந்த ஆண்டு ஜனவரியில் டில்லி, மும்பை, சென்னை, பெங்களூரு, ஐதராபாத், கோல்கட்டா உள்ளிட்ட நகரங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கு ஊழியர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதனையடுத்து பொதுமக்கள் பயன்பாட்டிற்காக, 'ஒய் பிரேக்' என்ற ஆண்ட்ராய்டு செயலியை மத்திய ஆயுஷ் அமைச்சகம் கடந்த வாரம் வெளியிட்டது. மேலும், அரசு ஊழியர்களின் நலனை கருத்தில் கொண்டு, யோகா பயிற்சி செய்ய ஐந்து நிமிட இடைவேளை வழங்கும் திட்டத்தை ஊக்குவிக்குமாறு, மற்ற அரசு துறைகளுக்கு மத்திய பணியாளர் நலத் துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

# அதிகாரியை தாக்கிய தி.மு.க. பிரமுகர்




விஜயபாரதம்

மணப்பாறை ஜீவா தெருவில் வசித்து வருபவர் அரிசி ஆலை அதிபரான கோபி. இவர், அப்பகுதியின் தி.மு.க நகர பொருளாளராக உள்ளார். வருவாய் வட்டாட்சியர் வளாகத்தில் உள்ள நகர நிலவரி திட்ட அலுவலகத்தில் பணியில் இருந்த தனிவட்டாட்சியர் ஜே. பாத்திமா சகாயராஜிடம் ஒரு பட்டாதாரரின் நிலம் குறித்து கேட்டுள்ளார் கோபி, அதனை தர மறுத்தார் தனி வட்டாட்சியர். இதனால் ஏற்பட்ட வாய் தகறாறு கைகலப்பாக மாறியது. இதில் இருவரும் காயமடைந்தனர். கோபி தனியார் மருத்துவமனையிலும், தனிவட்டாட்சியர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து வருவாய் வட்டாட்சியர், காவல் ஆய்வாளர் விசாரணை மேற்கொண்டனர். அதனையடுத்து, கோபி மீது தகாத வார்த்தைகளால் பேசியது, அரசு ஊழியரை பணி செய்யவிடாமல் தடுத்தது, கைகளால் தாக்குதலில் ஈடுபட்டது என 3 பிரிவிகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அலுவலகம் முன்பு தனி வட்டாட்சியரை தாக்கிய தி.மு.க பிரமுகர் கோபி மீது நடவடிக்கை எடுக்க கோரி வருவாய்த்துறை ஊழியர்கள் வெளிநடப்பு செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# டாக்டர் கிருஷ்ணசாமி கண்டனம்


விஜயபாரதம்

புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர், தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், 'உலகெங்கும் வாழக்கூடிய ஹிந்துக்கள் அனைவராலும் கொண்டாடப்படக்கூடிய மிக முக்கியமான விழா 'விநாயகர் சதுர்த்தி'. ஹிந்துக்களின் ஒவ்வொரு விழாவிற்குள்ளும் ஏதாவது ஒரு நல்ல அடிப்படை காரணம் ஒளிந்திருக்கும். இறை நம்பிக்கையைத் தாண்டி ஹிந்துக்களின் ஒற்றுமையையும், தேச ஒற்றுமையையும் வலியுறுத்துவதே விநாயகர் சதுர்த்தியின் சிறப்பு அம்சம். இந்த உண்மை வரலாற்றைத் தெரிந்து கொள்ளாததால், இது குறிப்பிட்ட ஒரு கட்சி, ஒரு முன்னணி விழாவாக மட்டுமே சிலர் குறுக்கிப் பார்க்கிறார்கள். அது தவறு. ஆங்கிலேயரை எதிர்த்து ஒன்று கூடுவதற்கும், சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுப்பதற்கும், தங்களுடைய வழிபாட்டு உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் உண்டான ஒரே மார்க்கமாக இருந்தது விநாயகர் வழிபாடு மட்டுமே. சிலை வைக்க, ஊர்வலம் செல்ல, நீர்நிலைகளில் கரைக்க அனுமதி இல்லை என மாநில அரசு தெரிவிப்பதை உள்நோக்கம் கொண்டதாகவே கருத முடியும்' என தெரிவித்துள்ளார்.

# ஸ்டெல்த் எதிர்ப்பு ரேடார்


விஜயபாரதம்

விமானப்படையிடம் தற்போது மீடியம் பவர் அருந்தார், அஷ்வினி, ரோஹினி 3டி வகை ரேடார்கள் நெடுந்தூர கண்காணிப்புக்கென்று உள்ளன. இதைத்தவிர, விமானப்படை தற்போது செயல்பாட்டில் உள்ள சோவியத் கால உரால் ட்ரக்கை அடிப்படையாக கொண்ட P18 இயர்லி வார்னிங் ரேடாருக்கு மாற்றாக நவீன 'கவுண்டர் ஸ்டெல்த் வெரி ஹை பிரிக்குவன்சி' வகை ரேடார்களை நமது ராணுவம் வாங்குகிறது. இந்த வி.ஹெச்.எப் ரேடார் 250 கி.மீ தூரம்வரை கண்காணிக்கும் திறன் பெற்றது. பெங்களூருவை சேர்ந்த ஆல்பா டிசைன் நிறுவனம், விமானப்படைக்கு இவ்வகையான 6 ரேடார்களை தயாரித்து வழங்கும் ஒப்பந்தத்தை பெற்றுள்ளது.

# வானியல் ஆய்வாளருக்கு கௌரவம்

இந்திய வானியல் ஆய்வகம் (ஐ.ஐ.ஏ)வில் பொறியியலாளராக இருப்பவர் டார்ஜே அங்சுக். இவர், ஐ.ஐ.ஏவின் லடாக் ஆய்வகத்தில் பொறியாளராக பணி புரிகிறார். லடாக் பிராந்தியத்தில் வானியலின் ஆர்வமுள்ளவர்களை ஊக்குவிப்பதற்காக அவர் பல அரிய புகைப்படங்களையும் காட்சிப்படுத்தியுள்ளார். இவரது சிறந்த வானியல் படங்கள் தி நியூயார்க்கர் இதழிலும் வெளியிடப்பட்டுள்ளது. இவர் தற்போது சர்வதேச வானியல் மையத்தின் 11 கௌரவ உறுப்பினர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார். இதில் உள்ள ஒரே பாரத தேசத்தவர் இவர்தான்.


விஜயபாரதம்

# பைபர் காஸ் சிலிண்டர்



விஜயபாரதம்

இந்தியன் ஆயில் நிறுவனம், 'மல்டி லேயர் பைபர் கிளாஸ்' என்ற, அதிக அடர்த்தி உடைய கண்ணாடி இழையால் தயாரிக்கப்பட்ட 5 கிலோ, 10 கிலோ எடை அளவுகளில், புதிய வகை சிலிண்டர்களை அறிமுகம் செய்கிறது. அவை சென்னை, கோவை உள்ளிட்ட இடங்களில் விரைவில் பயன்பாட்டிற்கு வர உள்ளன. இந்த சிலிண்டரில், திரவ நிலையில் உள்ள எரிவாயுவின் அளவை சரிபார்க்க முடியும். அதன் மொத்த எடை பழைய சிலிண்டர் எடையில் பாதியாகத்தான் இருக்கும். இந்தியன் ஆயில் நிறுவனத்தை தொடர்ந்து, மற்ற நிறுவனங்களும், இந்த புதிய வகை சிலிண்டரை அறிமுகம் செய்ய உள்ளன. எனினும் புதிய சிலிண்டர் பெற விரும்புவோர், அதற்கான டெபாசிட் தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள ரூ. 3,350ல், தாங்கள் ஏற்கனவே செலுத்தி டெபாசிட் போக, மீதி தொகையை செலுத்த வேண்டும்.

# மீண்டும் பா.ஜ.க

உத்தரப்பிரதேசம், பஞ்சாப், உத்தரகாண்ட், மணிப்பூர், கோவா ஆகிய ஐந்து மாநிலங்களில் விரைவில் நடைபெறவுள்ள சட்டமன்ற தேர்தலுக்கான 'தேர்தலுக்கு முந்தைய கணக்கெடுப்பை ஏ.பி.பி சி ஓட்டர்ஸ் வெளியிட்டது. அந்த கருத்துக் கணிப்பின்படி, அந்த ஐந்து மாநிலங்களில் உத்தரப்பிரதேசம், உத்தரகண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய நான்கில் பா.ஜ.க மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும். காங்கிரஸ் ஆளும் பஞ்சாபில், எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது. இருப்பினும், ஆம் ஆத்மி கட்சி பஞ்சாபில் தனிப்பெரும் கட்சியாக முன்னிலை வகிக்கலாம். ஐந்து மாநிலங்களிலும் காங்கிரஸ் கட்சி பெரும் நெருக்கடியை எதிர்கொள்கிறது' என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டில் மிகவும் விருப்பமான அரசியல் கட்சியாக பா.ஜ.க உள்ளது என்பதையே எடுத்துரைக்கிறது.

# நேரு யுவகேந்திரா சர்ச்சை



விஜயபாரதம்

நேரு யுவ கேந்திராவின் கேரள துணை இயக்குனர் அலி சப்ரின், மாப்ளா இனப்படுகொலையில் ஈடுபட்ட வாரியாகுன்னத் குஞ்சஹம்மது ஹாஜி உட்பட பலரை சுதந்திர போராட்ட தியாகிகளாக தவறாக சித்தரித்து நேரு யுவ கேந்திராவின் அதிகாரபூர்வ சமூக ஊடகங்களில் பகிர்ந்துள்ளார். இது குறித்து அதன் ஊழியர்களும் தன்னார்வலர்களும் கேள்வி கேட்டனர். அவர்களை அலி சப்ரின் மிரட்டி உள்ளார். குழுவில் யாரும் தன்னை குறைகூறாமல் இருக்க, நேரு யுவ கேந்திராவின் வாட்ஸ்ஆப் குழுவை அட்மின்கள் மட்டும் பதிவிடும் வகையில் மாற்றிவிட்டார். இது குறித்த புகார் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூருக்கு அனுப்பப்பட்டுள்ளது. முன்னதாக, இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எச்.ஆர்) மாப்ளா கலவரம் சுதந்திர போராட்டம் அல்ல. இது, ஹிந்துக்கள் மீதான முஸ்லிம்களின் இனப்படுகொலை. இதில் ஈடுபட்ட வாரியாகுன்னத் குஞ்சஹம்மது ஹாஜி உள்ளிட்டோரின் பெயர்கள் பாரத சுதந்திர போராட்ட தியாகிகள் அகராதியிலிருந்து நீக்கப்படும் என தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பசுமை பாதையில் ரயில்வே



விஜயபாரதம்

ரைடிங் சன்பீம்ஸ் என்ற சுற்றுச்சூழல் அமைப்பின் அறிக்கையில், 'பாரதத்தில் இந்திய ரயில்வே, மிகப்பெரிய மின்சார நுகர்வு அமைப்பு மற்றும் மூன்றாவது பெரிய டீசல் நுகர்வு அமைப்பு. கடந்த 201819ல் இது, 17,682 டெராவாட் மின்சாரம், 2,749 பில்லியன் லிட்டர் டீசல், 1,000 டன் நிலக்கரியை பயன்படுத்தியது. பாரதத்தின் மொத்த பசுமை வாயு உமிழ்வில் ரயில்வேயின் பங்கு 4 சதவீதம். 2023க்குள் ரயில்வேயின் 100 சதவீத மின்மயமாக்கலுக்கான திட்டங்களை அரசு அங்கீகரித்தது. 2030க்குள் காரன் உமிழ்வை பூஜ்ஜியமாகக் குறைக்கவும் அதன் மூலம் ஆண்டுக்கு ரூ. 17,000 கோடியை மிச்சப்படுத்தவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக காற்றாலை, சூரிய மின்னாற்றல் உள்ளிட்ட மாற்று எரிசக்தி பயன்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. இந்த செயல்முறை, ஆண்டுக்கு குறைந்தபட்சம் 15 மில்லியன் டன் கார்பன் டை ஆக்சைடு உமிழ்வைக் குறைக்க உதவும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# விரிவாக்கத்தில் ரிலையன்ஸ்

சர்வதேச பருவகால மாநாட்டில் முகேஷ் அம்பானி உலகிலேயே முதல் நாடாக இந்தியா கிரீன் ஹைட்ரஜன் வாயுவை ஒரு கிலோ வெறும் 1 டாலருக்கு உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயம் செய்துள்ளதாக அறிவித்துள்ளார். இது அடுத்த 10 வருடத்திற்குள் சாத்தியமாகும் என கூறியுள்ளார். இது பல நாடுகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது. மேலும், கிரீன் எனர்ஜி பிரிவில் 4 தொழிற்சாலைகளை உருவாக்க 75,000 கோடி ரூபாய் அளவிலான தொகையை முதலீடு செய்யத் திட்டமிட்டு உள்ளது ரிலையன்ஸ். பாரதத்தில் தற்போது ஆன்லைன் மற்றும் ஆப்லைன் சந்தையில் ஒயிட் குட்ஸ் எனப்படும் டி.வி. பிரிட்ஜ், வாஷிங் மெஷின், லைட், ஃபேன் போன்ற பொருட்களுக்கு டிமாண்ட் அதிகரித்துள்ளது. இதனையடுத்து, ரிலையன்ஸ் ரீடைல் நிறுவனம் பி.பி.எல், கெல்வினேட்டர் ஆகிய இரு முக்கிய பிராண்டுகளைக் கைப்பற்றியுள்ளது. இதன் மூலம் ஒயிட் கூட்ஸ் உற்பத்தி, விநியோகம், விற்பனையில் இறங்க உள்ளது. ஹெல்த்கேர் பிரிவிலும் தனது கவனத்தைத் திருப்பியுள்ள ரிலையன்ஸ் நிறுவனம், தனது ரிலையன்ஸ் ஸ்ட்ராடஜிக் பிஸ்னஸ் வென்சர்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் வாயிலாக ஜீனோம் டெஸ்டிங் நிறுவனமான ஸ்ட்ரான்ட் லைப் சயின்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் 80 சதவீத பங்குகளைக் கைப்பற்றியுள்ளது.

Reliance

விஜயபாரதம்

# டிரோன் எதிர்ப்பு அமைப்பு



விஜயபாரதம்

பாரத கடற்படை, டி.ஆர்.டி.ஓ தயாரிப்பு கடற்சார் டிரோன் எதிர்ப்பு அமைப்பை மத்திய அரசின் பெல் நிறுவனம் உற்பத்தி செய்துத்தர ஏற்கனவே ஒப்பந்தம் செய்துள்ளது. இந்நிலையில், டிரோன்களால் ஏற்படும் ஆபத்தை தவிர்க்க இந்த அமைப்பு தற்போது ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில், பாதுகாப்பு படைகளுக்காக அவசரத் தேவையை முன்னிட்டு ஜென் டெக்னாலஜி நிறுவனத்திடம் இருந்து சுமார் 120 கோடிகள் செலவில் டிரோன் எதிர்ப்பு அமைப்புகளை வாங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஒரு வருடத்திற்குள்ளாக தயாரித்து வழங்கும் வகையில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது. எனவும் ஒப்பந்தத்தின் இரகசியம் கருதி ஒப்பந்தம் குறித்த தகவல்களை வெளியிட முடியாது என ஜென் டெக்னாலஜி நிறுவனம் கூறியுள்ளது. காஷ்மீரில் விமான தளத்தில் ஆளில்லா டிரோன் மூலம் தாக்குதல் நடந்த பிறகு முப்படைகளும் தற்போது இதனால் ஏற்படும் பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்து டிரோன் எதிர்ப்பு அமைப்புகளை வாங்குவதில் கவனம் செலுத்தி வருகின்றன.


# மேம்படுத்தப்பட்ட பயிற்சி விமானம்

ஹிந்துஸ்தான் ஏரோனாட்டிக்ஸ் லிமிடெட் (ஹால்) நிறுவனம் மேம்படுத்தியுள்ள HTT40 வகை அடிப்படை பயிற்சி விமானத்தின் கடைசி கட்ட மேம்பாடு தொடர்பான சோதனைகளை வெற்றிகரமாக சோதனை விமானிகளைக் கொண்டு நடத்தி முடித்துள்ளது. தற்போது இது ஆபரேசன் கிளியரன்சிற்கு தயாராக உள்ளதாக ஹால் கூறியுள்ளது. குறைந்த அளவு தொடர் தயாரிப்பிற்கு தேவையான அனைத்து மேம்பாட்டு தொடர்பான சோதனைகளும் ஏற்கனவே முடிவடைந்துள்ளது. எனவே அடுத்த வருடத்தில் இருந்து குறைந்த அளவு தொடர் தயாரிப்பிற்கு விமானம் உட்படுத்தப்பட உள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் 2012ல் நடைபெற்ற ஊழல் காரணமாக ஸ்விஸ் தயாரிப்பு பிளாட்டஸ் விமானங்கள் வாங்குவதை நிறுத்தியது மத்திய அரசு. அதன் பிறகு ஹால் நிறுவனத்தின் HTT40 விமான மேம்பாட்டிற்கு பாதுகாப்பு அமைச்சகம் முழு ஆதரவு அளித்தது. 106 அடிப்படை பயிற்சி விமானங்கள் வாங்கவும் முடிவு செய்யப்பட்டது. விரைவில் இந்த விமானத்தை உபயோகிப்பாளர் சோதனையாக பாரத விமானப்படை நேரடி சோதனை செய்ய உள்ளது.

விஜயபாரதம்



# சுதேசி இணைய வர்க்கம்




விஜயபாரதம்

இணையத்தில் வர்த்தகம் நடைபெறும் மிகப்பெரிய சந்தைகளில் பாரதமும் ஒன்று. ஆனால், இதில் பெரும்பாலும் சீன பொருட்களும் மற்ற வெளிநாட்டுப் பொருட்களும்தான் அதிகம் கிடைக்கின்றன. பாரதம் பொருளாதாரம் உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர வேண்டும் என்றால் மக்கள் அனைவரும் பாரதத்தில் தயாரான சுதேசி பொருட்களை பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் தர வேண்டும். சுதேசி பொருட்களை மற்ற இணைய வர்த்தக தளங்களில் தேட நாம் சற்று மெனக்கெட வேண்டியுள்ளது. இந்த இடைவெளியை குறைக்கும் பொருட்டு, சுதேசி (www. swadesi.co <http://www.swadesi.co>) என்ற இணைய வர்த்தக தளம், செயலி மாதவ் திர், சிருஷ்டி திர் ஆகியோரால் துவங்கப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க உள்நாட்டிலேயே தயாரான சுதேசி பிராண்டுகளை பிரபலப்படுத்துதல், அதில் இணைந்துள்ள தயாரிப்பாளர்கள், வியாபாரிகள் வாழ்க்கையை மேம்படுத்துதல், மக்களிடம் சுதேசி விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த முயற்சி துவங்கப்பட்டுள்ளது. இதில், தற்போது சுமார் 1,000 விற்பனையாளர்கள் இணைந்துள்ளனர்.

# போதைப்பொருள் பயங்கரவாதம்

ஜம்முவில் ஹந்த்வாராவின் கைரோ பாலத்தில் வாகன சோதனையின்போது, ரூ. 20,01,000/ மற்றும் 2 கிலோ ஹெராயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. மேலும் விசாரணையில் 15 கிலோ ஹெராயின் மற்றும் ரொக்கப் பணம் ரூ. 1.15 கோடி பணம் கைப்பற்றப்பட்டது. இதில் சம்பந்தப்பட்ட ஷோகத் சலாம் பரே, ஆசிப் குல், அல்தாஃப் அகமது ஷா, ரோமேஷ் குமார், முதசிர் அகமது தார், அமின் அல்லாய், அப்துல் ரஷீத் ஆகியோர் மீது தேசிய புலனாய்வு முகமை, ஜம்முவில் உள்ள என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றத்தில், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. இவர்கள் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளான லஷ்கர் இ தொய்பா, ஹிஸ்புல் முஜாஹிதீன் அமைப்புகளுடன் தொடர்பில் இருந்துள்ளனர். நேக்ரோ டெரரிசம் எனப்படும் போதைப்பொருள் பயங்கரவாதிகளான இவர்கள், போதைப்பொருள் பயன்பாட்டை ஊக்குவிப்பது, அதன் மூலம் பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டுவது, பயங்கரவாத செயல்களை ஊக்குவிப்பது போன்றவற்றில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு பதியப்பட்டுள்ளது.

விஜயபாரதம்



# உன்னை நேசிக்கிறேன்



விஜயபாரதம்

மறைந்த முதல்வர் ஜெ. ஜெயலலிதா, கட்சிக் கூட்டங்களுக்கோ, இதர விசேஷங்களுக்கோ எப்போது சென்றாலும் தன் கட்சியின் செயல்பாடுகள் பற்றியும், எதிர்க்கட்சி செய்யும் தவறுகள் பற்றியும் குட்டிக்கதைகளாகச் சொல்வார். அந்தக் கதைகள், நீதிக்கதைகளாகவும், புராணக்கதைகளாகவும், தழுவியக் கதைகளாகவும் இருக்கும். அவர், இதுபோல் 100க்கும் மேற்பட்ட கதைகளைச் சொல்லியிருக்கிறார். அதில் ஒரு கதை இது. இன்றைய தி.மு.க அரசின் ஹிந்து விரோத செயல்பாடுகளை பார்க்கும்போதும் அவர்களை தேந்தெடுத்த மக்களை பார்க்கும் போதும் ...... இக்கதை பொருத்தமாகத்தான் உள்ளது...

''மலைப் பகுதியில் ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டில் ஒரு சின்னஞ்சிறு பையன் இருந்தான். அவன் ஒருநாள் தன் அம்மாவிடம் சண்டை போட்டுக்கொண்டு, 'நான் உன்னை வெறுக்கிறேன்' என்று சொல்லிக்கொண்டே வெளியே ஓடினான். போனவன் வீட்டுக்கு வெளியே ஓரிடத்தில் நின்றுகொண்டு, 'நான் உன்னை வெறுக்கிறேன்' என்று உரக்கக் கத்தினான். அது, மலைப்பகுதி என்பதால், அவன் சொன்ன வார்த்தை திரும்பத்திரும்ப எதிரொலித்தது.

ஆனால், பாவம். சின்னஞ்சிறு பையனாகிய அவனுக்கு... அது அவனுடைய குரலின் எதிரொலிதான் என்று தெரியவில்லை. உடனே வேகமாக வீட்டுக்கு ஓடிச் சென்று அம்மாவைக் கட்டிக்கொண்டு தயங்கி தயங்கி பேச ஆரம்பித்தான். 'ஏன் இப்படிப் பயப்படுகிறாய்' என்று அம்மா கேட்டாள். 'இந்த மலையில் நிறைய கெட்டப் பையன்கள் இருக்கிறார்கள். அந்தப் பையன்கள் எல்லோரும், 'நான் உன்னை வெறுக்கிறேன்... நான் உன்னை வெறுக்கிறேன்' என்று கத்துகிறார்கள்' என்றான் அந்தச் சிறுவன்.

அவனுடைய தாய்க்கு என்ன நடந்திருக்கும் என்று புரிந்தது. அவள் புத்திசாலி. அவள் என்ன நடந்தது என்பதையும் விளக்கிச் சொல்லவில்லை. அவள் மகனைப் பார்த்துச் சொன்னாள், 'இப்போது நான் சொல்கிறபடி செய். நீ முன்னால் நின்ற இடத்தில் போய் நின்றுகொண்டு, 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று உரக்கச் சொல்' என்று கூறி அனுப்பிவைத்தாள். அவனும் அம்மா சொன்னபடியே அதே இடத்தில் போய் நின்றுகொண்டு, 'நான் உன்னை நேசிக்கிறேன்' என்று உரக்கக் கத்தினான். அவன் சொன்ன வார்த்தை திரும்பத்திரும்ப எதிரொலித்தது.

பையனுக்கு இப்போது சந்தோஷம். இந்தக் கதை நமக்குச் சொல்வது என்ன? நீங்கள், இந்த உலகத்துக்கு எதைக் கொடுக்கிறீர்களோ... அதுதான் உங்களுக்குத் திரும்ப வரும் என்பதுதான் இந்தக் கதை உணர்த்துகின்ற செய்தி... உணர்த்துகின்ற உண்மை.''